**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case Number | | MC No. 24/2024 |
| Deposition of witness | | PW- 1 /LW- 1 |
| Name | | திருமதி. சிவபாரதி |
| Father's/Husband Name | | திரு.அரவிந்த் |
| Village | | அணைக்காடு |
| Taluk | | பட்டுக்கோட்டை |
| Age | | 27/2025 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 17th day of April 2025**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் செல்வி.கு.பரமேஸ்வரி, bench clerk Gr-3 என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

## எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

எதிர்மனுதாரர் அணைக்காடு கிராமத்தை சேர்ந்தவர். நான் அணைக்காடு கிராமத்தில் வாடியக்காடு என்ற பகுதியை சேர்ந்தவர். நான் எனது பெற்றோருக்கு ஒரே மகள் ஆவேன். எதிர்மனுதாரருக்கு உடன்பிறந்த ஒரு மூத்த சகோதரி உள்ளார். நாங்கள் இருவரும் உறவினர்கள் தான். எதிர்மனுதாரர் எனக்கு மாமா பையன் முறைதான். எதிர்மனுதாரரின் குடும்பத்தை பற்றி நன்கு தெரிந்து தான் திருமணம் செய்து கொண்டேன் என்றால் அவரை பற்றி எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியாது. அவர் வெளிநாட்டில் வேலை செய்தார். நான் MSc., Mphil., படித்துள்ளேன். எதிர்மனுதாரர் என்ன படித்துள்ளார் என்று எனக்கு தெரியாது ஆனால் M.B.A படித்துள்ளதாக சொன்னார்கள். எங்கள் குடும்பம் வசதியான குடும்பமா என்றால் இல்லை. தினம் தினம் வேலை செய்துதான் வாழ்ந்து வருகிறோம். எனது திருமணம் எப்படி நிச்சயிக்கபட்டது என்றால் எனது மாமியார்

தான் முதலில் வந்து பெண் கேட்டு திருமணம் நடந்தது. எதிர்மனுதாரர் வசதியானவரா என்றால் அவருக்கு வீடு மற்றும் தோப்பு உள்ளது. மேற்படி சொத்துக்கள் அவருடைய தந்தை வழி தாத்தா சொத்து ஆகும். மேற்படி வீடு எதிர்மனுதாரர் சம்பாதிதியத்தில் கட்டடப்பட்டது. வேற எதுவும் எனக்கு தெரியாது. அவருடைய தாத்தாவிற்கு மொத்தம் மூன்று பிள்ளைகள். எதிர்மனுதாரருடைய அப்பா , சித்தப்பா மற்றும் ஒரு பெண் பிள்ளை. எதிர்மனுதாரருடைய தகப்பனார் மற்றும் அவர் உடன்பிறந்தவர்களுடன் சொத்து தகராறு சம்பந்தமாக வழக்கு நிலுவையில் உள்ளது. அந்த இடத்தில் பங்கு கேட்டுதான் வழக்கு நடந்து வருகிறது. எதிர்மனுதாரரின் குடும்பத்துக்கும் அவரின் சித்தப்பா குடும்பத்திற்கும் இந்த சொத்து சம்பந்தமாக அடிதடி வழக்கும் நிலுவையில் உள்ளது. அவரின் சித்தப்பா மகன் பெயர் மதிவாணன். மதிவாணனை எனக்கு நன்கு தெரியும். மேற்படி சொத்தில் எதிர்மனுதாரரின் தாத்தா, பாட்டியும் தனியாக சமைத்து சாப்பிட்டு வந்தார்கள். பக்கத்தில் தனியாக கொட்டைகை போட்டு வாழ்ந்து வந்தார்கள். தாத்தா இறந்து விட்டார். அம்மாட்சி மட்டும் உயிருடன் உள்ளார். இருவருக்கும் 90 வயதுக்கு மேல் இருக்கும். எதிர்மனுதாரரின் அம்மா வீட்டுகுடித்தனம். அப்பா வேலை எதுவும் பாக்கவில்லை. எனது மாமனார் , மாமியார் இரண்டு பேரும் சர்க்கரை மற்றும் இருதய நோயாளிகள். எதிர்மனுதாரரின் மூத்த சகோதரி திருமணம் செய்து விவாகரத்து ஆன பின் 2வது திருமணம் செய்து தற்போது திருச்சியில் வசித்து வருகிறார். எனது நாத்தனார் திருச்சி ஆவினில் Deputy Manager ஆக வேலை செய்து வருகிறார். என்னுடைய திருமணத்திற்கு முன்பே எனது நாத்தனார் திருச்சியில் வேலை செய்து அங்கேயே குடியிருந்து வருகிறார். எதிர்மனுதாரர் திருமணத்திற்கு முன்பு 6 வருடம் மலேசியாவில் வேலை பார்த்து திருமணத்திற்கு பிறகும் மலேசியாவில் வேலை செய்தார். அவர் அங்கு கிளினராக வேலை செய்தாரா என்றால் இல்லை, HR ஆக வேலை பார்த்தார். அந்த வேலையை பற்றி எனக்கு எதுவும் தெரியுமா என்றால் sairam industries  ல் வேலை பார்த்தார். எதிர்மனுதாரர் என்ன படித்துள்ளார்

என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அவருடைய சம்பளம் எவ்வளவு என்று எனக்கு தெரியுமா என்றால் மாதம் ஒரு லட்சம் ரூபாய் வாங்கினார். அதற்கு salary bill எதுவும் என்னிடம் இல்லை. 2023 விவாகரத்து வழக்கு தாக்கல் செய்ததில் இருந்து வெளிநாட்டிற்கு செல்லாமல் இங்கேயே வேலை பார்த்து கொண்டிருக்கிறார். இங்கு computer center ல் வேலை பார்த்து வருகிறார். எந்த கம்பியூட்டர் சென்டரில் வேலை பார்த்து வருகிறார் மற்றும் அவரின் சம்பளம் எவ்வளவு என்று எனக்கு தெரியாது. நான் சொல்லும் படி அவர் கம்பியூட்டர் சென்டரில் மற்றும் HRஆக பணிபுரிய அளவிற்கு கல்வி தகுதி கிடையாது என்றால் சரியல்ல. எதற்காக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தீர்கள் என்றால் எதிர்மனுதாரர் என்னுடைய வீட்டில் எனக்கு சீதனம் கொடுத்த நகையை கேட்டு அடித்ததால் புகார் கொடுத்தேன். அந்த புகாரின் பேரில் எதிர்மனுதாரர், அவருடைய பெற்றோர் மற்றும் சகோதரி பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் மற்றும் அவருடைய பெற்றோர் பிணையம் பெற்று ஜாமினில் வெளியே வந்துள்ளனர். காவல் நிலையத்தில் நிபந்தனை கையெழுத்து போட்டுவந்தார்கள். அவருடைய சகோதரி ஜாமின் வாங்காமல் வெளியே இருந்ததால் நான் குற்றபத்திரிக்கை தாக்கல் செய்ய சொல்லி மேல்முறையீடு சென்றேன். அதன் பிறகு அவர் நீதிமன்றத்தில் பிணையம் பெற்றார். வழக்கை நடத்தி அவர்களுக்கு தண்டனை பெற்றுதரவேண்டும் என்று தான் மேல்முறையீடு சென்றேனா என்றால் ஆமாம். தற்போது இந்த குற்ற வழக்கு வந்ததால் அவர் வெளிநாட்டிற்கு செல்ல முடியவில்லை என்றால் ஆமாம். எனக்கு மண்டையில் அடிப்பட்டது ஆனால் நான் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு செல்லவில்லை. எனது அப்பா, அம்மாவுக்கும் அடிப்பட்டது ஆனால் அவர்களும் சிகிச்சைக்கு செல்லவில்லை. எதிர்மனுதராரின் சித்தப்பா மேகநாதன் காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிகிறார் என்றால் ஆமாம். நான் அவருடைய சித்தப்பா குடும்பத்தில் பேச்சுவார்த்தையில் உள்ளேன் என்றால் இல்லை.

அவருடைய குடும்பத்தில் 3 நாட்கள் முன்பு கோவிலில் சண்டை நடந்தது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. அந்த அய்யனார் கோவில் அவருடைய குலதெய்வ கோவில் என்றால் சரிதான். 3 நாட்களுக்கு முன்பு என்னுடைய குழந்தைக்கு முடி இறக்க அந்த கோவிலுக்கு சென்றேன். குழந்தைக்கு முடி காணிக்கை செலுத்தப்பட்டது. இந்த முடி காணிக்கை எடுத்த விபரம் எதுவும் எனது கணவர் மற்றும் அவருடைய குடும்பத்தாருக்கு தெரியாது என்றால் சரிதான். கோவிலில் 3 நாட்களுக்கு முன்பு அவரின் சித்தப்பா குடும்பத்தினர் எதிர்மனுதாரரின் தகப்பனாரை தாக்கினார் அதற்கு நானும் உடந்தையாக இருந்தேன் என்றால் சரியல்ல. நான் எனது கணவருடன் சேர்ந்து வாழ தான் விருப்பபடுகிறேன். சேர்ந்து வாழ்வதற்கு எதாவது சட்ட நடவடிக்கை எடுத்துள்ளீரா என்றால் இல்லை. 2023 குழந்தை பிறந்த காலத்தில் இருந்து நாங்கள் பிரிந்து தான் வாழ்ந்து வருகிறோம். எனக்கு சொந்தமாக மனைக்கட்டு மற்றும் அதில் வீடு உள்ளது. நான் தற்போது வீட்டில் தான் உள்ளேன், வேலைக்கு செல்லவில்லை. என்னுடைய கல்வி தகுதிக்கு வேலை கிடைக்கும் ஆனால் குழந்தை உள்ளதால் நான் போகமுடியவில்லை. இந்த மனுதாக்கல் செய்த சமயத்தில் எனது கணவர் வெளிநாட்டில் வேலை பார்க்க வில்லை. சொந்த ஊரில் தான் இருந்தார் ஆனால் வெளிநாட்டிற்கு வேலைக்கு ஆட்கள் அனுப்பும் ஏஜெண்டாக இருந்தார். அது பற்றி எனக்கு விபரம் தெரியுமா என்றால் எனக்கு நேரடியாக தெரியாது. இந்த மனுதாக்கல் செய்தபோது அவர் என்ன சம்பளம் வாங்கினார் என்று எனக்கு நேரடியாக தெரியாது. அவருக்கு மாடி வீடு மற்றும் 1 1/2 மா தென்னந்தோப்பு உள்ளது என்று மனுவில் சொல்லி உள்ளீர் ஆனால் அது அவர் பெயரில் இல்லை. இருவருக்கும் பட்டுக்கோட்டை சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த விவாகரத்து வழக்கிற்கு பிறகு தான் நான் குற்ற வழக்கு புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அவருடைய சித்தப்பா காவல் நிலையத்தில் பணிபுரியும் செல்வாக்கை வைத்து தான் நான் இந்த குற்ற

வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. அவருடைய சித்தப்பா மற்றும் மகன் மதிவாணன் ஆலோசனை பேரில் தான் நான் செயல்படுகிறேன் என்றால் சரியல்ல. சமூக நலத்துறையில் நான் கொடுத்த புகாரின் பேரில் தான் விசாரணை நடத்தினார்கள் என்றால் சரிதான். வரதட்சணை கொடுமை சம்மந்தமாக அவருடைய பெற்றோர் மற்றும் சகோதரி பேரில் கொடுத்த புகார் என்றால் சரிதான். சமூக நலத்துறை விசாரணை அறிக்கையில் வரதட்சணை கொடுமை எதுவும் இல்லை என்றுதான் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வரதட்சணை கொடுமை பற்றி என்னிடம் விசாரிக்க வில்லை. யாருடைய தூண்டுதலின் பேரில் புகார் கொடுத்தீர்கள் என்று மட்டும் தான் கேட்டார்கள். அந்த அறிக்கை சம்பந்தமாக நான் எதுவும் மேல்நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. விவாகரத்து வழக்கில் சமரசமாக போக நான் எதாவது முயற்சி செய்தேனா என்று கேட்டால் இல்லை.

**எதிர்மனுதாரரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/- திரு. த.சுதர்சன்.,எம்.ஏ.,எல்.எல்.பி.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை